அந்தரங்கமானது

NEW

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2019

## 44 - இஸ்லாம்

### புதிய பாடத்திட்டம்

### புள்ளியிடும் திட்டம்

இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
## தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
## கல்விப் பொதுத்தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை – 2019 ஆகஸ்ட்

## 44 - இஸ்லாம்

### புதிய பாடத்திட்டம்

### புள்ளியிடும் திட்டம்

பரீட்சார்த்திகள் இவ்வினாத்தாளில் உள்ள பகுதி I இலிருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும், பகுதி II இலிருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.

**பகுதி I**

02 வினாக்களுக்கும் - 02 x 20 = 40 புள்ளிகள்

**பகுதி II**

03 வினாக்களுக்கும் - 03 x 20 = 60 புள்ளிகள்

**மொத்தம்**

05 வினாக்களுக்கும் - 40 + 60 = 100 புள்ளிகள்

**இறுதிப் புள்ளி கணக்கிடல்**

| | | |
|---|---|---|
| பத்திரம் I க்கு | - | 100 புள்ளிகள் |
| பத்திரம் II க்கு | - | 100 புள்ளிகள் |
| இறுதிப் புள்ளிகள் | - | 200 / 2 புள்ளிகள் = 100 புள்ளிகள் |

# ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2019

### නව නිර්දේශය/ புதிய பாடத்திட்டம்

විෂය අංකය / பாட இலக்கம்: **44**

විෂය / பாடம்: **இஸ்லாம்**

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 5 | 11. | 4 | 21. | 1 | 31. | 2 | 41. | 4 |
| 02. | 1 | 12. | 1 | 22. | 1/5 | 32. | 1 | 42. | 1/2 |
| 03. | 4 | 13. | 2 | 23. | 4 | 33. | 1 | 43. | 1 |
| 04. | 4 | 14. | 5 | 24. | 2 | 34. | 4 | 44. | 5 |
| 05. | 2 | 15. | 3 | 25. | 1 | 35. | 1/5 | 45. | 4 |
| 06. | 1 | 16. | 3 | 26. | 4 | 36. | 4 | 46. | 1 |
| 07. | 4 | 17. | 1 | 27. | 3 | 37. | 2 | 47. | 3 |
| 08. | 1 | 18. | 2 | 28. | 2 | 38. | 5 | 48. | 3 |
| 09. | 5 | 19. | 3 | 29. | 2 | 39. | 5 | 49. | 2 |
| 10. | 1 | 20. | 1 | 30. | 1 | 40. | 2 | 50. | 1 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 02 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 2 × 50 = 100

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

ඉස්ලාම් II
இஸ்லாம் II
Islam II

44 T II

06.08.2019 / 0830 – 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

※ **பகுதி I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் **பகுதி II** இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) 'தக்வா' என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ii) தக்வாவின் முக்கியத்துவம் பற்றி அல்-குர்ஆன், சுன்னாவின் ஆதாரங்கள் ஒவ்வொன்றினை முன்வைத்து, அவற்றை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) அன்றாட வாழ்வில் தக்வாவை கடைப்பிடிப்பதால் கிடைக்கும் பயன்கள் **நான்கினைக்** குறிப்பிட்டு, அவற்றுள் **இரண்டை** விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) ஓர் முஸ்லிமின் வாழ்வில் ஆன்மீக முன்னேற்றத்திற்கு தடையாக அமையும் **நான்கு** அம்சங்களைக் குறிப்பிட்டு, அவற்றுள் **இரண்டு** விடயங்களை அன்றாட வாழ்வில் எவ்வாறு தவிர்த்துக் கொள்வது என்பது பற்றி விளக்குக. (08 புள்ளிகள்)

**2.** (i) 'யவ்முல் ஆகிரா' என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ii) இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் உலக முடிவுக்கான அடையாளங்கள் **நான்கினை** முன்வைத்து, அவற்றுள் **இரண்டை** சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) மறுமை நம்பிக்கை ஓர் முஸ்லிமின் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கங்களுள் **ஆறு** அம்சங்களைக் குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

(iv) 'கழா கத்ர்' பற்றிய நம்பிக்கை மனித வாழ்வை நெறிப்படுத்திக்கொள்வதற்கு எவ்வாறு துணை புரிகின்றது என்பதை விளக்குக. (08 புள்ளிகள்)

**3.** (i) 'பர்ளுஐன்', 'பர்ளுகிபாயா' ஆகியவற்றை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)

(ii) தொழுகை, நோன்பு ஆகிய வணக்கங்கள் ஒவ்வொன்றினதும் ஒவ்வொரு நோக்கத்தை குறிப்பிட்டு, அவற்றை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) மனித வாழ்வின் அனைத்து செயற்பாடுகளும் இபாதத்தாக அமைவதற்கு அவசியமான நிபந்தனைகளுள் **நான்கினைக்** குறிப்பிட்டு, அவற்றுள் **இரண்டினை** விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) ஸகாத் கூட்டாக நிறைவேற்றப்படவேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டும் **நான்கு** காரணங்களை முன்வைத்து, அவற்றுள் **இரண்டினை** நடைமுறை வாழ்வுடன் தொடர்புபடுத்தி விளக்குக. (08 புள்ளிகள்)

## பகுதி II

**4.** (i) இஸ்லாமிய பொருளாதாரத்தின் நடைமுறைசார்ந்த அடிப்படைகள் **ஐந்தினை** முன்வைத்து, அவற்றை சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) இஸ்லாமிய வங்கியின் ஒழுங்கமைப்பை எடுத்துக்காட்டி, அதன் அடிப்படைகளை விவரிக்குக. (10 புள்ளிகள்)

**5.** (i) இஸ்லாமிய சட்டக்கலையில் கருத்து வேற்றுமை தோன்றுவதற்கு ஏதுவாக அமைந்த காரணங்கள் **ஐந்தினை** விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) இஸ்லாமிய சட்டக்கலையின் பொற்காலம் என வர்ணிக்கப்படும் காலப்பிரிவு எது? இக்கால பிக்ஹுக் கலை வளர்ச்சி பற்றி விளக்குக. (10 புள்ளிகள்)

**6.** (i) உற்பத்தி மற்றும் நுகர்வு தொடர்பான இஸ்லாமிய சட்டவிதிகளையும் ஒழுங்குகளையும் விவரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) குடும்ப வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளைக் குறிப்பிட்டு, அதற்கான இஸ்லாத்தின் தீர்வுகளை விளக்குக. (10 புள்ளிகள்)

**7.** (i) இமாம் திர்மிதி (ரஹ்) அவர்களது வாழ்க்கை வரலாற்றைக் குறிப்பிட்டு, அவர்கள் ஹதீஸ் கலைக்கு ஆற்றிய பங்களிப்பை விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) கவாரிஜ் சிந்தனைப் பிரிவின் தோற்றம், வளர்ச்சி பற்றி விளக்கி, அதன் பிரதான கோட்பாடுகளை விவரிக்குக. (10 புள்ளிகள்)

**8.** பின்வருவன பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) 'மஸ்லஹா முர்ஸலா' (05 புள்ளிகள்)

(ii) இஸ்லாமும் சமய நல்லிணக்கமும் (05 புள்ளிகள்)

(iii) பைதுல் மால் (05 புள்ளிகள்)

(iv) இலங்கையின் சுதந்திரத்திற்கு முஸ்லிம்கள் ஆற்றிய பங்களிப்பு (05 புள்ளிகள்)

* * *

01. (i) தக்வா என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ii) தக்வாவின் முக்கியத்துவம் பற்றி அல்குர்ஆன் சுன்னாவின் ஆதாரங்கள் ஒவ்வொன்றினை முன்வைத்து அவற்றை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) அன்றாட வாழ்வில் தக்வாவை கடைபிடிப்பதால் கிடைக்கும் பயன்கள் நான்கினைக் குறிப்பிட்டு அவற்றுள் இரண்டை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) ஒரு முஸ்லிமின் வாழ்வில் ஆன்மீக முன்னேற்றத்திற்கு தடையாக அமையும் நான்கு அம்சங்களை குறிப்பிட்டு, அவற்றுள் இரண்டு விடயங்களை அன்றாட வாழ்வில் எவ்வாறு தவிர்த்துக் கொள்வது என்பது பற்றி விளக்குக. (08 புள்ளிகள்)

(i) தக்வா என்றால் என்ன?

- 'தக்வா' என்பது ஓர் அரபுமொழிச் சொல்லாகும். இது இறையச்சம், தற்காத்துக்கொள்ளல், தவிர்ந்து கொள்ளல், எனும் கருத்துக்களைத் தரும்.
- இஸ்லாமிய வழக்கில் 'தக்வா' என்பது அல்லாஹ்வின் கட்டளைகளை முடியுமானவரை எடுத்து நடப்பதும், அல்லாஹ் தடுத்தவற்றை முழுமையாக தவிர்ந்துகொள்வதையும் குறிக்கும்.
- உமர் (ரழி) அவர்கள் உபையிப்னு கஃப் (ரழி) அவர்களிடம் தக்வா என்றால் என்ன? என வினவியபோது, 'நீங்கள் முட்கள் நிறைந்த பதையில் நடந்து சென்றதுண்டா? என வினவினார்கள். ஆம் என்றதும். 'அவ்வாறாயின் எவ்வாறு செல்வீர்கள்? என வினவியபோது, ' எனது ஆடைகளில் முட்கள் தைக்காத வண்ணம் உயர்த்திப்பிடித்துச் செல்வேன் என்றார். அப்போது, அவர், அதுதான் தக்வாவாகும் என கூறினார்கள். அதாவது சமூகத்தில் காணப்படும் அனாச்சாரங்களில் வீழ்ந்து விடாமல் தன்னைக் காத்துக்கொள்வதாகும்.

(மேற்கூறியவகையில் சுருக்கமாக எழுதியிருப்பின் இரண்டு புள்ளிகள்)

(ii) தக்வாவின் முக்கியத்துவம் பற்றி அல்குர்ஆன் சுன்னாவின் ஆதாரங்கள் ஒவ்வொன்றினை முன்வைத்து அவற்றை விளக்குக. (04 புள்ளிகள்)

- **தக்வா ஈமானின் அடிப்படை.**

  மனிதனது அடிப்படை தேவைகளுடன் அல்குர்ஆன் தக்வாவை ஒப்பிடுகிறது
  - 'நீங்கள் கட்டுச்சாதங்களை எடுத்துக்கொள்ளுங்கள். கட்டுச்சாதன்களில் மிகச்சிறந்தது தக்வாவேயாகும்" (அல்பகரா : 197)
  - 'தக்வா எனும் ஆடை, அதுவே சிறந்ததாகும்" (அல்அஃராப் : 27)
- தக்வா இல்லாத எந்தச் செயற்பாடுகளும் இறைவனால் அங்கீகரிக்கப்படாது, 'குர்பானுடைய இறைச்சியோ, அதன் இரத்தமோ அல்லாஹ்வை சென்றடைவதில்லை. மாறாக, உங்களுடைய தக்வாவே அவனைச் சென்றடையும்" (அல்ஹஜ் : 37)
- இறையச்சம் இல்லாமல் மரணித்தால் சுவனம் கிடைக்காது, 'நீங்கள் முஸ்லிம்களாகவே அன்றி மரணிக்க வேண்டாம்". (ஆலு இம்ரான் : 102)
- மனிதனுடைய சகல அடைவுகளையும் பெற்றுக்கொள்வதற்கான வழியாக தக்வா அமைகிறது. 'யார் அல்லாஹ்வை தக்வா செய்கின்றாரோ, அவருக்கு அல்லாஹ் பிரச்சினைகளிலிருந்து வெளியேறும் வழியைக் கொடுப்பான்" (அத்தலாக் : 02)
- ஆளுமை விருத்திக்கான அடிப்படையாக அமைதல். 'யார் அல்லாஹ்வை தக்வா செய்கின்றாரோ, அவருக்கு அல்லாஹ் போதுமானவனாக இருக்கிறான். (அத்தலாக் : 3)
- நபியவர்கள் இறையச்சத்தை வேண்டி பிராத்தித்துள்ளமை, ' இறைவா உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், கற்பொழுக்கத்தையும் வேண்டுகிறேன்" (முஸ்லிம்)

(இதுபோன்ற நான்கு கருத்துக்கள் ஆதாரங்களுடன் விளக்கி எழுதப்பட்டிருப்பின் 4 புள்ளிகள்)

(iii) அன்றாட வாழ்வில் தக்வாவை கடைபிடிப்பதால் கிடைக்கும் பயன்கள் நான்கினைக் குறிப்பிட்டு அவற்றுள் இரண்டை விளக்குக. (06 புள்ளிகள்)

- இறையச்சம் எல்லா நன்மைகளையும் கொண்டுவருவதோடு, எல்லா தீமைகளை விட்டும் தடுக்கும்.
- நற்பண்புகளை உருவாக்கும்.
- அல்லாஹ், அடியான், ஏனைய உயிரினங்களின் உரிமைகளைப் பேணி நடக்கும் பண்பை உருவாக்கும்.
- நல்லோருடன் சேர்ந்து நடப்பதோடு, தீயவர்களை விட்டும் தவிர்ந்து நடக்கும் பண்பை உருவாக்கும்.
- சகிப்புத்தன்மையை ஏற்படுத்தும்.
- துணிவை ஏற்படுத்தும்.
- பிரச்சினைகளிலிருந்து வெளியேற வழியேற்படுதல். 'யார் அல்லாஹ்வை தக்வா செய்கின்றாரோ, அவருக்கு அல்லாஹ் பிரச்சினைகளிலிருந்து வெளியேறும் வழியைக் கொடுப்பான். அவர் எதிர் பாராத விதத்தில் வாழ்க்கை வசதிகளை வழங்குவான்". (அத்தலாக்: 2-3)
- அறியாத விதத்தில் வாழ்க்கை வசதிகளை ஏற்படுத்தல். 'யார் அல்லாஹ்வை தக்வா செய்கின்றாரோ, அவருக்கு அல்லாஹ் வாழ்க்கை வசதிகளை ஏற்படுத்துவான்"
- பாவங்களை மன்னித்தல். 'விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வை தக்வா செய்தால் உங்களுக்கு பிரித்தறியும் ஆற்றலைக் கொடுப்பான். உங்களது பாவச் செயல்களைப் போக்கி மன்னிப்பை வழங்குவான்". (அல்அன்பால் : 29)
- மகத்தான கூலி கிடைத்தல். (அத்தலாக் : 05)
- காரியங்கள் இலகுவாக்கப்படல். (அத்தலாக் : 04)
- பிரித்தறியும் ஆற்றல் வழங்கப்படல். (அல்அன்பால் : 29)

(இதுபோன்ற நான்கு கருத்துக்கள் எழுதப்பட்டிருந்தால் இரண்டு புள்ளிகளும் அவற்றுள் இரண்டு விளக்கப்பட்டிருந்தால் நான்கு புள்ளிகளுமாக ஆறு புள்ளிகள் வழங்கவும் 2 + 4 = 6 புள்ளிகள்)

(iv) ஒரு முஸ்லிமின் வாழ்வில் ஆன்மீக முன்னேற்றத்துக்கு தடையாக அமையும் நான்கு அம்சங்களை குறிப்பிட்டு அவற்றுள் இரண்டு விடயங்களை அன்றாட வாழ்வில் எவ்வாறு தவிர்த்துக் கொள்வது என்பது பற்றி விளக்குக. (08 புள்ளிகள்)

ஆன்மீகத்தைப் பாதிக்கும் தீய பண்புகளான பெருமை, பொறாமை, கர்வம், தீய எண்ணம், நிபாக், ரியாஉ, மனோஇச்சைக்குக் கட்டுப்படல், அவசர புத்தி, கோபம், சுயநலம் போன்றவைகளை ஒரு முஃமின் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

**அகம்பாவம் / தற்பெருமை**

- முஃமின்களது பண்புகள் தொடர்பாக அல்குர்ஆன் : 'ரஹ்மானின் அடியார்கள் பூமியில் பணிவாக நடப்பார்கள்"
- பெருமை, கண்ணியம் என்பன எனது ஆடைகளாகும். இவற்றில் ஒன்றையாவது எவன் என்னிடமிருந்து எடுத்துக் கொள்கிறானோ அவனை நரகில் நுழையச் செய்வேன். (முஸ்லிம்)
- எனவே மனிதன் எந்தத் தரத்தில் இருந்தாலும் அது இறைவனின் சோதனையேயாகும். எனவே, அவன் தனது மேலான அந்தஸ்திற்காக ஆணவம் கொள்ளவோ, அடுத்தவனைப் பார்த்து எள்ளி நகையாடவோ முடியாது.
- பெருமை மனிதனை இழிவுபடுத்தக் கூடியது. பணிவோ உயர்வையும் வெற்றியையும் நல்கக் கூடியது. இறை நெருக்கத்தை தரக்கூடியது.

**தவிர்ந்துகொள்ள பேண வேண்டிய வழிமுறைகள்**

- தக்வாவை கடைபிடித்தல்
- பணிவுடன் நடத்தல்
- அல்லாஹ்வின் வல்லமையையும், சக்தியையும் அறிந்து உள்ளத்தில் ஆழப்பதித்தல்.
- மறுமை சிந்தனையுடன் இருத்தல்.
- வணக்க வழிபாடுகளில் கூடுதலாக ஈடுபடல்.
- சமூகமயமாக இருத்தல்.

**பொறாமை**

- “விறகை நெருப்பு எரிப்பது போல் நன்மைகளைப் பொறாமை எரித்துவிடும். (அபூதாவூத்)
- “வேதம் கொடுக்கப்பட்டவர்கள், நபியவர்களை எதிர்ப்பதற்கு பொறாமை காரணம்.”(2:119)
- “அடியார்கள் உள்ளத்தில் ஈமானும் பொறாமையும் இணையாது”(ஹதீஸ்)

**களைவதற்கான வழிமுறைகள்**

- சமூகத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளுக்கு இறைவனே காரணம் என்ற கருத்தை உள்ளத்தில் ஆழப்பதிந்து கொள்ளல். (4 : 54)
  “இறைவா! என்னிடம் உள்ள அருட்கொகைள் அல்லது வேறு ஒருவரிடம் உள்ள அருட்கொடைகள் உன்னிடமிருந்து மட்டுமே பெறப்பட்டன”. (அபூதாவுத்)

- தன்னை விட தரத்தில் கீழ் நிலையில் உள்ளவனை ஒப்பு நோக்கிப் பார்த்தல்.
  “உங்களை விட தாழ்ந்தவர்களைப் பாருங்கள் உங்களைவிட உயர்ந்தவர்களைப் பார்க்காதீகள். அதுவே அல்லாஹ்வின் அருள்களைப் புறக்கணிக்காமல் இருக்க வழி” (முஸ்லிம்)

- கழா கத்ரை பொருந்திக் கொள்ளல்.

- பேராசையைத் தவிர்ந்து கொள்ளல்.

**பொய் பேசுதல்**

- தன் இரு கண்களும் பார்த்திராத ஒன்றை இரு கண்களுக்கும் காட்டுவதே அனைத்தையும் விட பெரிய பொய்யாகும். (புகாரி)
- “உண்மை திருப்தியைத் தரும். பொய் ஐயங்களுக்கும் சபலங்களுக்கும் வழிவகுக்கும்.(திர்மிதி)
- ‘ஒரு முஃமினிடம் எல்லாத் தீமைகளும் இருக்கலாம். ஆனால், அவனிடம் பொய் இருக்கக் கூடாது.” (அஹ்மத்)

**தவிர்த்துக் கொள்ள மேற்கொள்ள வேண்டியவை :**

- தக்வாவை கடைபிடித்தல்.
- பேணுதலைக் கடைபிடித்தல்.
- ஸுஹ்தை (பற்றற்ற வாழ்வு) கடைபிடித்தல்
- பொய்யினால் ஏற்படும் விளைவுகளை விளங்குதல்

**புறம் பேசுதல்**

- (எவருடைய குற்றத்தையும்) நீங்கள் துருவித் துருவி விசாரித்துக் கொண்டிருக்க வேண்டாம். உங்களில் ஒருவர் மற்றெவரையும் புறம் பேச வேண்டாம். (49:11)
- ‘உங்களில் எவனும் தன்னுடைய சகோதரனின் மாமிசத்தைப் புசிக்க விரும்புவானா? அதனை நீங்கள வெறுப்பீர்களே! (புறம் பேசுவதும் அவ்வாறே) நீங்கள் அல்லாஹ்விற்குப் பயந்துகொள்ளுங்கள். (49:12)
- ஒருமுறை ஆயிஷா (றழி) அவர்கள், ஸபிய்யா (ரழி) அவர்கள் குட்டையானவர் எனப் பேசியதைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள் ஆயிஷாவை நோக்கி “நீர் இப்போது பேசிய வார்த்தையை கடல்நீரில் கலந்துவிட்டால் அது கூட நாசமாகிவிடும் என்றார்கள். (அபூதாவூத்)

**தவிர்ந்து கொள்ள கடைபிடிக்க வேண்டியவை**

- புறம் பேசுவதன் விளைவை அல்குர்ஆனும் சுன்னாவும் கண்டித்துள்ளமையை உணர்ந்து செயற்படல்.
- தக்வாவை கடைபிடித்தல்.
- பேணுதலைக் கடைபிடித்தல்.
- ஸுஹ்தை கடைபிடித்தல்
- தன்னை விட தரத்தில் கீழ் நிலையில் உள்ளவனை ஒப்பு நோக்கிப் பார்த்தல்.

**கோள் மூட்டுதல்**

- “நபியே! எடுத்ததற்கெல்லாம்) சத்தியம் செய்யும் எந்த நீசனையும் நீர் வழிப்படாதீர். அவன் சதா (புறம் பேசிக்) குற்றங் கூறி, கோள் சொல்வதையே தொழிலாகக் கொண்டு திரிபவன்.
- ரஸுல் (ஸல்) அவர்கள் கோள் சொல்வதை விட்டும் புறம் பேசுவதை விட்டும் தடுத்தார்கள். (ரியாலுஸ்ஸாலிஹீன்)

  “கோள் சொல்லித் திரிபவன் சுவனம் நுழையமாட்டான்” (புஹாரி)

**அதனை தவிர்க்க வழிகள்**

- கோள் மூட்டுவதன் விளைவை அல்குர்ஆனும் சுன்னாவும் கண்டித்துள்ளமையை உணர்ந்து செயற்படல்.
- தக்வாவை கடைபிடித்தல்.
- பேணுதலைக் கடைபிடித்தல்.
- ஸுஹ்தை கடைபிடித்தல்
- தன்னை விட தரத்தில் கீழ் நிலையில் உள்ளவனை ஒப்பு நோக்கிப் பார்த்தல்.

**அவதூறு கூறல்**

- “எவர் கற்புடைய பெண்கள் மீது அவதூறு கூறி (அதற்கு வேண்டிய) நான்கு சாட்சிகளை அவர்கள் கொண்டு வராவிட்டால், அவர்களை நீங்கள் எண்பது கசையடி அடியுங்கள். பின்னர் அத்தகையவர்கள் கூறும் சாட்சியத்தை எக்காலத்திலும் ஒப்புக்கொள்ளாதீர்கள். நிச்சயமாக அவர்கள் (வரம்பு மீறிய) தீயவர்கள். (24:4)

- அவதூறு கூறியவரின் சாட்சியத்தை அவர் இறக்கும்வரை ஏற்றுக் கொள்வதில்லை. அவரை பாஸிக் (பெரும் பாவி) என குர்ஆன் குறிப்பிடுகின்றது.

- அவதூறுக்கான தண்டனை இவ்வளவு கடுமையாக அமையக் காரணம் மானத்தை விட உலகில் மிகப் பெறுமதி வாய்ந்த சொத்து வேறு எதுவுமில்லை என்பதனாலாகும்.

**தவிர்க்க வழிகள் :**

- அவதூறு பெரும்பாவம் என்தையும் அதன் விளைவையும் உணர்ந்து செயற்படல்
- அவதூறினால் ஏற்படும் தனிமனித சமூக ரீதியான பாதிப்புக்களை தெளிவுபடுத்தல்.
- இம்மையிலும் முறுமையிலும் தண்டனைக்குரியது என்பதை உணர்த்துதல்.

**பேராசை**

- உலகப்பற்று மிக்க வாழ்வுக்கு ஓர் அடையாளம்
- பேராசை மனித உள்ளத்தில் வளரும் போது தயாள குணம் மறைந்து கஞ்சத்தனம் ஏற்படும். (அத்தகாஸுர் - 1-2), (ஆல இம்ரான் - 14)
- உலக இன்பங்களை தேடி அலைபவர்களை விட்டுவிடுங்கள். யார் உலக இன்பங்களில் தன் தேவைக்கதிகம் எடுத்துக்கொள்கிறானோ அவன் அழிவைத் தேடிக்கொள்கிறான் (பஸ்ஸார்)

**பேராசையை ஒழிப்பதற்கான வழிமுறைகள் :-**

- நடுநிலையை கையாளுதல் - 'நடுநிலையாக இருப்பவன் வறுமைக்குள்ளாக மாட்டான்"
- எதிர்காலத்தை நினைத்து கவலை கொள்ளாமல் இருத்தல். (அத்தலாக் : 2-3)
- உள்ளதைக் கொண்டு திருப்தியடைதல். ' முஃமினின் கண்ணியம் மனிதர்களிடம் அவன் தேவையற்றவனாக இருப்பதிலேயே உள்ளது" (துபறானி)
- உலகில் உள்ள நல்ல மனிதர்களின் வாழ்வையும், தீய மனிதர்களின் வாழ்வையும் ஒப்பு நோக்கிப் பார்த்தல்.
- தன்னை விட தரத்தில் கீழ் நிலையில் உள்ளவனை ஒப்பு நோக்கிப் பார்த்தல்.

(இதுபோன்ற நான்கு கருத்துக்கள் குறிப்பிட்டிருந்தால் 2 புள்ளிகளும் அவற்றுள் இரண்டை அன்றாட வாழ்வில் தவிர்த்துக் கொள்வது தொடர்பாக விளக்கியிருப்பின் 6 புள்ளிகளுமாக 8 புள்ளிகள் 4 + 4 = 8 புள்ளிகள்)

**மொத்தமாக 2+4+6+8 = 20 புள்ளிகள்**

02. (i) 'யவ்முல் ஆகிரா' என்றால் என்ன ? (02 புள்ளிகள்)

(ii) இஸ்லாமிய கண்ணோட்டத்தில் உலக முடிவுக்கான அடையாளங்கள் நான்கினை முன்வைத்து அவற்றுள் இரண்டை சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) மறுமை நம்பிக்கை ஒரு முஸ்லிமின் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கங்களுள் ஆறு அம்சங்களை குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

(iv) 'கழா' கத்ர் பற்றிய நம்பிக்கை மனித வாழ்வை நெறிப்படுத்திக்கொள்வதற்கு எவ்வாறு துணை புரிகின்றது என்பதை விளக்குக. (08 புள்ளிகள்)

(i) 'யவ்முல் ஆகிரா' என்றால் என்ன ? (02 புள்ளிகள்)

- 'யவ்முல் ஆகிரா' என்ற சொல் இறுதி நாள் என்ற கருத்தைக் குறிக்கும்.
- இஸ்லாமிய கண்ணோட்டத்தில் இப்பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் அழிக்கப்பட்டு மீண்டும் உருவாக்கப்படுகின்ற நிலையான நாளைக் குறிக்கும்.

(இவைபோன்ற பொருத்தமான விளக்கங்கள் எழுதப்பட்டிருந்தாலும் 02 புள்ளிகள்)

(ii) இஸ்லாமிய கண்ணோட்டத்தில் உலக முடிவுக்கான அடையாளங்கள் நான்கினை முன்வைத்து அவற்றுள் இரண்டை சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

- உலக முடிவுக்குரிய அடையாளங்களை பல வகையில் அடையாளப்படுத்தலாம்.
- சிறிய அடையாளங்கள், பெரிய அடையாளங்கள் எனவும், நடந்து முடிந்த அடையாளங்கள், நடந்துகொண்டிருக்கும் அடையாளங்கள், நடக்கவிருக்கும் அடையாளங்கள் எனவும் வகைப்படுத்தி நோக்கப்படலாம்.
- இதில் நடக்கவிருக்கும் அடையாளங்கள் அனைத்தும் பெரிய அடையாளங்களாக கொள்ளப்படுகின்றன. இவற்றில் ஒன்று நடைபெற்றால் அதனைத் தொடர்ந்து மற்றொன்று அடுத்தடுத்து ஏற்படல்.

**1. நடந்து முடிந்த அடையாளங்கள்**

- நபி (ஸல்) அவர்களின் வருகை.
- முஸ்லிம்கள் தமக்கிடையே மோதிக்கொள்ளுதல் (ஜமல், ஸிப்பீன் யுத்தம்).
- நபித்துவ வாதம் புரியும் பொய்யர்களின் தோற்றம்.
- செல்வம் பெருகுதல் (உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களின் காலத்தில்)
- தாத்தாரியர் யுத்தம் (ஹி- 7ம் நூற்றாண்டு).
- ஹிஜாஸ் நெருப்பு (ஹி- 654).
- பூகம்பங்கள் அதிகரித்தல்.

**2. நடந்து கொண்டிருக்கும் அடையாளங்கள்**

- மனோ இச்சைக்கு கட்டுப்படல், உலோபித்தனம் அதிகரித்தல்.
- ஒருவனின் தீவினைக்கு பயந்து மரியாதை செய்தல்.
- தன் கருத்தையே சரியென வாதிடல், பிறர் கருத்துக்களை அலட்சியம் செய்தல்.
- உலக இலாபங்களுக்காக மார்க்க அனுஷ்டானங்களை மாற்றுதல்.
- கணவன் மனைவிக்கு கட்டுப்படல், மனைவி கணவனை அவமதித்தல்.
- துறவி வேடம் பூண்டு உலகப்பற்றற்றவரைப்போன்று நடித்தல்.
- காலம் சுருங்குதல்.
- குழப்பங்கள் அதிகரித்தல்.
- உயர் கட்டிடங்களை நிர்மாணிப்பதில் வறுமையிலிருப்போர் போட்டி போடுதல்.
- தகுதியற்றோர் உயர் பதவிகளில் அமர்த்தப்படுதல்.
- அமானிதம் மீறப்படுதல்.
- பள்ளிவாசல்களைப் பற்றி பெருமை பேசுதல்.
- அறிஞர்கள் மரணித்தல்.
- அறிவு கைப்பற்றப்படல்.
- கொலை அதிகரித்தல்.
- விபச்சாரம் பெருகுதல்.
- அறியமை அதிகரித்தல்.
- வட்டி, மதுப்பாவனை அதிகரித்தல்.

**நடக்கவிருக்கும் அடையாளங்கள்**

- மஹ்தி (அலை) அவர்களின் வருகை.
- தஜ்ஜாலின் வருகை.
- ஈஸா (அலை) அவர்களின் வருகை.
- யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தாரின் வருகை.
- தாப்பதுல் அர்ழ் எனும் பிராணி வெளிப்படல்.
- சூரியன் மேற்கில் உதித்து மேற்கில் மறைதல்.
- அபீஸீனியாவைச் சேர்ந்த ஒருவனால் கஃபா இடிக்கப்படல்.
- புகை மண்டலமொன்று தோன்றி நாற்பது நாட்கள் நீடிக்கும். பின் நறுமணமிக்க காற்று வெளிப்பட்டு முஸ்லிம்கள் அனைவரும் இறந்து விடுதல்.
- ஒரு வகை நெருப்பு யமனில் உண்டாகி உலகெங்கும் பரவுதல். மக்களை ஷாம் நோக்கி துரத்துதல்
- சூர் ஊதப்படுதல்

(இவற்றுள் நான்கை முன்வைத்திருந்தால் 01 புள்ளியும் அவற்றில் இரண்டை சுருக்கமாக விளக்கியிருந்தால் 1 1/2 X 2 = 3 புள்ளியுமாக 04 புள்ளிகள்)

(iii) மறுமை நம்பிக்கை ஒரு முஸ்லிமின் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கங்களுள் ஆறு அம்சங்களை குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

- மனித வாழ்வை நெறிப்படுத்த துணை செய்யும்.
- சகிப்புத்தன்மையும் பொறுமையும் ஏற்படும்.
- பொது நல உணர்வும், தாராளத் தன்மையும், ரிழாவும் ஏற்படும்.
- நேர்மை, மன உறுதி, சுறுசுறுப்பு, போன்ற பண்புகள் உருவாகும்.
- இக்லாஸ் ஏற்படும்.
- நன்மை செய்வதில் ஆர்வமும் தீமையை எதிர்த்து போராடும் பக்குவமும் ஏற்படும்.
- மன நிம்மதி ஏற்படும்.
- ஒழுக்க வாழ்வு சீர்பெறும்

(இவை போன்ற விடயங்கள் 6 சுருக்கமாக விளக்கி எழுதியிருப்பின் 1X 6 = 6 புள்ளிகள்)

(iv) 'கழா கத்ர்' பற்றிய நம்பிக்கை மனித வாழ்வை நெறிப்படுத்திக்கொள்வதற்கு எவ்வாறு துணை புரிகின்றது என்பதை விளக்குக. (08 புள்ளிகள்)

- கழா கத்ர் பற்றிய சுருக்கமான விளக்கம்.
- மன நிறைவையும் சுறுசுறுப்பையும் தோற்றுவித்தல்.
- மன நிம்மதியையும் ஆறுதலையும் தோற்றுவிக்கும்.
- மனித பலவீனத்தை உணர்தல்
- நிகழ்பவற்றை அங்கீகரித்தல்.
- மனவிரக்தியிலிருந்து பாதுகாப்பு கிடைத்தல்.
- தோல்வி மனப்பான்மையிலிருந்து விடுதலை பெறல்.
- பொறுமையையும் சகிப்புத்தன்மையையும் ஏற்படுத்தல்.
- தொடர் முயற்சிக்கு வழிவகுத்தல்.
- உள ஆரோக்கியத்தை பேண வழிவகுத்தல்.
- வெற்றியையும் தோல்வியையும் சமமாக மதிக்கும் மனப்பான்மையை தோற்றுவித்தல்

(இவை போன்ற 8 விடயங்கள் விளக்கி எழுதியிருப்பின் 1X 8 = 8 புள்ளிகள்)

(2 +4+6+8 = 20 புள்ளிகள்)

03. (i) 'பர்ளு ஐன்', 'பர்ளு கிபாயா' ஆகியவற்றை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)

(ii) தொழுகை, நோன்பு ஆகிய வணக்கங்கள் ஒவ்வொன்றினதும் ஒவ்வொரு நோக்கத்தை குறிப்பிட்டு, அவற்றை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) மனித வாழ்வின் அனைத்துச் செயற்பாடுகளும் இபாதத்தாக அமைவதற்கு அவசியமான நிபந்தனைகளுள் நான்கினை குறிப்பிட்டு அவற்றுள் இரண்டினை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) ஸகாத் கூட்டாக நிறைவேற்றப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டும் நான்கு காரணங்களை முன்வைத்து அவற்றுள் இரண்டினை நடைமுறை வாழ்வுடன் தொடர்பு படுத்தி விளக்குக. (08 புள்ளிகள்)

(i) 'பர்ளு ஐன்', 'பர்ளு கிபாயா' ஆகியவற்றை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)

- 'பர்ளு ஐன்' என்பது முஸ்லிமான, புத்தி சுவாதீனமான, பருவமடைந்த ஒவ்வொரு ஆண், பெண் மீதும் விதியாக்கப்பட்ட கடமையைக் குறிக்கும். இதனை நிறைவேற்றுவது ஒவ்வொருவர் மீதும் கடமையாகும்.

- 'பர்ளு கிபாயா' என்பது ஒரு சமூகக் கடமையாகும். இதனை சமூகத்திலுள்ள ஒரு பகுதியினர் நிறைவேற்றினால் போதுமானதாகும். நிறைவேற்றியோருக்கு மட்டுமே நன்மை கிடைக்கும். நிறைவேற்றாதோருக்கு தண்டனை இல்லை. யாருமே நிறைவேற்றவில்லையெனில் எல்லோர் மீதும் குற்றமாக கருதப்படும்.

(பர்ளு ஐன்னினது விளக்கத்துக்கு ஒரு புள்ளியும் பர்ளு கிபாயாவினது விளக்கத்துக்கு ஒரு புள்ளியுமாக 1 + 1 = 2 புள்ளிகள்)

(ii) தொழுகை, நோன்பு ஆகிய வணக்கங்கள் ஒவ்வொன்றினதும் ஒவ்வொரு நோக்கத்தை குறிப்பிட்டு அவற்றை விளக்குக. (04 புள்ளிகள்)

➤ **தொழுகை : - தொழுகை என்பது அரபியில 'அஸ்ஸலாத்' என்று கூறப்படும். இப்பதம் நியமமாக செய்து வரல், பிரார்த்தனை, வளைந்த தடியை நேராக்குதல் போன்ற கருத்துக்களைத் தரும்.**

➤ **இஸ்லாமிய வழக்கில் தக்பீர் தஹ்ரீமாவோடு ஆரம்பித்து ஸலாத்தோடு முடிவடையக்கூடிய சில ஓதல்களையும் செயற்பாடுகளையும் உள்ளடக்கிய ஒரு வணக்கத்தைக் குறிக்கும்.**

**தொழுகையின் நோக்கங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.**

- அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிதல்.
- அல்லாஹ்வின் நெருக்கத்தை பெறுதல்
- நிறைவேற்றுவதன் மூலம் மறுமை வெற்றியை உறுதிப்படுத்தல் (அல் அன்ஆம் : 72)
- உலகின் சீரான செயற்பாட்டுக்கு உந்து சக்தியாக அமைதல்.
- தொழுகையை சரியாக நிறைவேற்றும் போது அடியார்களுக்கிடையிலான ஆளிடைத் தொடர்பு சீர்பெறும்.
- தக்வாவை ஏற்படுத்தி பாவச்செயல்களிலிருந்து தவிர்ந்துகொள்ளல். (அல் அன்கபூத் : 45)
- நற்கூலியைப் பெற்று சுவனப்பாக்கியத்தை அடைந்து கொள்ளல். (2 : 277)
- அல்லாஹ்வை ஞாபகம் செய்தல் (20 : 14)
- உள நிம்மதியை ஏற்படுத்தல் (13 : 28

(இவைபோன்ற கருத்துக்களில் ஒன்றை விளக்கி எழுதியிருப்பின் 02 புள்ளிகள்)

- காலச் சூழ்நிலைகளால் ஏற்படும் பொருளாதார ரீதியான தேவைகள், மாற்றங்கள், சிக்கல்களின் போது இஸ்லாமிய அறிஞர்கள் இஜ்திஹாத் செய்து தீர்வு காணல்.

- ஒப்பந்தரீதியான பொருளாதாரச் செயற்பாடுகள் சாட்சிப்படுத்தப்படலும் எழுதப்படலும். “நம்பிக்கையாளர்களே! நீங்கள் ஒரு குறித்த தவணையின் மீது கடன் கொடுத்துக் கொண்டால் அதை எழுதிக் கொள்ளுங்கள்.” (அல்குர்ஆன்)

  (உற்பத்தி, விநியோகம், சந்தைப்படுத்தல், நுகர்வு, விற்பனை போன்ற அம்சங்களையும் எழுதலாம்)

  (இதுபோன்ற ஐந்து கருத்துக்கள் விளக்கி எழுதியிருப்பின் 2 X 5 = 10 புள்ளிகள்)

(ii) இஸ்லாமிய வங்கியின் ஒழுங்கமைப்பை எடுத்துக்காட்டி அதன் அடிப்படைகளை விபரிக்குக.

**இஸ்லாமிய வங்கியின் ஒழுங்கமைப்பு**

- இஸ்லாமிய ஷரீஆவுக்கு உற்பட்டு பணப்பரிமாற்றத்தை நெறிப்படுத்தி சமூக மேற்பாட்டுக்கு உதவும் நிறுவனமே இஸ்லாமிய வங்கியாகும்.
- தனது இலக்குகளை அடைவதற்குப் பின்வரும் மூன்று பிரதான ஒழுங்குகளைக் கடைப்பிடிக்கின்றமை.
  1. சேமிப்புக்கான தூண்டுதலும் அதற்கான பயிற்சியை வழங்குதலும்
  2. உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான பயிற்சி வழங்குதல்.
  3. முதலீட்டுத் துறையில் எதிர்நோக்கப்படும் சிரமங்களைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளைக் கற்றுக்கொடுத்தல்.

**இஸ்லாமிய வங்கியின் அடிப்படைகள்**

- வட்டியுடனான தொடர்புகள், செயற்பாடுகளை முற்றாகவே தவிர்த்தல்.
- செல்வம் திரட்டுவதற்குரிய மூலதனமாகப் பணம் மட்டுமன்றி, மனிதனது உடல்ரீதியான, சிந்தனா ரீதியான உழைப்பும், நம்பிக்கை, நாணயமும் அவசியமாகின்றன என்ற கருத்தை வலியுறுத்தல்.
- பொருளாதார அபிவிருத்தியோடு சமூக அபிவிருத்தியையும் தொடர்புபடுத்தல்.
- செல்வப் பரிமாற்றங்களை இலகுபடுத்தல்.
- உற்பத்தித் திறனை மேம்படுத்தல்.
- மூலதனத்தை விருத்தி செய்தலும் உறுதிப்படுத்தலும்.
- இஸ்லாமிய அடிப்படையிலான கூட்டுவாழ்வுக்கும், பரஸ்பர ஒத்துழைப்புக்கும் வழி வகுப்பதோடு மக்கள் மத்தியில் நீதியானதும், சமத்துவமானதுமான வளப்பகிர்வு இடம்பெற உதவுதல்.
- சமூக ஐக்கித்துக்கும் பொருளாதார மேம்பாட்டுக்கும் வகைசெய்தல்.
- ஷரீஅத் சட்ட விதிமுறைகளுக்கமைவான தொழிற்றுறைகளையும் முதலீட்டு முயற்சிகளையும் அறிமுகம் செய்தல்.
- வங்கியின் இயக்கம், செயற்பாடுகள் ஆகிவற்றை இஸ்லாமிய ஷரீஅத் சட்ட விதிகளுக்கு இசைவாக அமைத்துக் கொள்ளல்.

(மூன்று ஒழுங்கமைப்புகளுக்கு 3 புள்ளிகளும், அடிப்படைகள் ஏழு குறிப்பிடப்பட்டிருப்பின் 7 புள்ளிகளுமாக மொத்தம் 3 + 7 = 10 புள்ளிகள்)

05. (i) இஸ்லாமிய சட்டக்கலையில் கருத்து வேற்றுமை தோன்றுவதற்கு ஏதுவாக அமைந்த காரணங்கள் ஐந்தினை விளக்குக. (10 புள்ளிகள்)

- அறிமுகம்

காரணங்கள்

1. பல கருத்தைத் தரும் சட்ட வசனங்கள் அல்குர்ஆன் ஸுன்னாவில் காணப்படுகின்றமை.

உ-ம் 'குர்உ' என்ற சொல்

2. ஹதீஸ் ஒன்றை உறுதிப்படுத்துவதில் கருத்து வேறுபாடு தோன்றுதல்
   - ஒரு ஹதீஸ் ஒரு இமாமுக்கு கிடைத்து இன்னும் ஒருவருக்கு கிடைக்காது போதல்.
   - இருவருக்கம் கிடைத்தாலும் ஒருவர் அந்த ஹதீஸை ஏற்க மற்றவர் அதனை நிராகரித்தல்

3. சட்ட வசனத்தை விளங்குவதில் (புரிதல்) ஏற்படும் கருத்து வேறுபாடு
   - ஒரு சொல் பல மொழிக்கருத்துக்களை கொண்டுள்ளமை
   - சில வசனங்கள் சுருக்கமாக கூறப்பட்டிருப்பதனால் அதனை விளங்குவதில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு தோன்றுதல்
   - சில வசன அமைப்புகள் பல கருத்தை கொடுப்பதாக அமைந்துள்ளமை

4. முரண்பட்ட சட்ட வசனங்களிடையே இணக்கம் காண்பதிலும் அவற்றில் ஒன்றை உறுதிப்படுத்துவதிலும் ஏற்படும் வேறுபாடுகள்
   - வெளிப்படையில் முரண்பாடு போன்று தோன்றும் ஹதீஸ்களில் இணக்கம் காண்பதில் ஏற்படும் கருத்துவேறுபாடு சட்டத்தில் கருத்து வேறுபாட்டை தோற்றுவிக்கும்

5. சட்டவாக்க மூலாதாரங்கள், விதிகளில் காணப்பட்ட கருத்து வேறுபாடுகள்
   - துணை மூலாதரங்களில் சிலதை சிலர் ஏற்பர் இன்னும் சிலர் அவற்றை மறுப்பர் எனவே கறுத் துவேறுபாடு தோன்றும்.

(இவை போன்ற 5 கருத்துக்களை விளக்கி எழுதியிருப்பின் 2 × 5 = 10 புள்ளிகள்)

(ii) இஸ்லாமிய சட்டக்கலையின் பொற்காலம் என வர்ணிக்கப்படும் காலப்பிரிவு எது? இக்கால பிக்ஹ் கலை வளர்ச்சி பற்றி விளக்குக. (10 புள்ளிகள்)

- பொது அறிமுகம்
- பிக்ஹுக் கலையின் தோற்றமும் வளரச்சியும்.
- பிக்ஹின் பொற்காலம் ஹி 2ம் நூற்றாண்டு -4ஆம் நூற்றாண்டு காலப்பகுதி
- உமையாக்களின் இறுதிப்பகுதியும் அப்பாஸியரின் பெரும் பகுதியும் ஆகும்.

**பொற்காலம் என்பதற்கான காரணங்கள்**

1. இஸ்லாமிய கிலாபத்தின் எல்லைகள் விரிந்து செல்லல், வித்தியாசமான பிரிவுகள், வித்தியாசமான பழக்கவழக்கங்கள், சமூகக் கிரியைகள், நம்பிக்கைகள் அறிமுகமாகுதல். எனவே சட்டங்கள் வகுக்க ப்பட வேண்டிய தேவை உருவாகுதல்.
2. அறிவியல் வளர்ச்சியின் காரணமாக பல புதிய பிரச்சினைகள் தோற்றம் பெற்றன எனவே அதற்கான தீர்வு பெறவேண்டிய தேவை ஏற்பட்டது.
3. முஸ்லிம் சமூகம் வாழ்வின் சகல பகுதிகளிலும் இஸ்லாமிய சட்டத்தை எதிர்பார்த்தது (உலகம்,மறுமை) இதனால் அறிஞர்களை, சட்டத்தீர்பு வழங்குபவர்களை தேடிச்செல்லும் நிலை அதிகரித்தது.

4. தரமான இமாம்கள் காணப்பட்டமை குறிப்பாக 4 மத்ஹபுகளின் இமாம்கள் தோற்றம் பெற்றமை.
5. தரமான நூல்களும், ஆய்வுகளும் தோற்றம் பெற்றமை.

(இவை போன்ற ஐந்து கருத்துக்கள் விளக்கி எழுதியிருப்பின் 2 X 5 = 10 புள்ளிகள்)

06 (i) உற்பத்தி மற்றும் நுகர்வு தொடர்பான இஸ்லாமிய சட்ட விதிகளையும் ஒழுங்குகளையும் விவரிக்குக.

(10 புள்ளிகள்)

- உற்பத்தி, நுகர்வு பற்றிய சிறிய அறிமுகம்
- உலகில் உற்பத்தியாகும் அனைத்தும் அருட்கொடைகளே
- அல்லாஹ் மனிதனுக்கு இவற்றை வசப்படுத்திக் கொடுத்துள்ளான்
- ஆகுமான உற்பத்திப் பொருட்கள் நுகர்வதை எவராலும் தடுக்க முடியாது (இனம், சாதியின் பெயரால்)
- உற்பத்திகளை அனுபவிக்கும் உரிமையை மனிதன் பிறப்போடு பெற்றுள்ளான்
- உற்பத்திகளை அனுபவிக்கும் உரிமை நிபந்தனைகளுடன் வழங்கப்பட்டுள்ளது
  " உண்ணுங்கள் பருகுங்கள் வீண் விரயம் செய்யாதீர்கள்" (அல்குர்ஆன்)
- வீண் விரயம் தவிர்க்கப்படல் வேண்டும்
- ஹலாலை மட்டும் நுகர்தல்
- எல்லை மீறி அனுபவிக்கக் கூடாது
- உற்பத்தியாளர்,நுகர்வோர் நலன் கவனிக்கப்படல் வேண்டும்.
- உற்பத்தியாளர், விற்பனையாளர் இலாபத்தை மாத்திரம் நோக்காகக் கொள்ளக் கூடாது
- ஹராமான உற்பத்திகள் தடுக்கப்படல் (மனிதனுக்கு தீங்கு பயப்பனவற்றை உற்பத்தி செய்யக் கூடாது)
- மனித நலன், உற்பத்தியின் போதும் நுகர்வின் போதும் கவனிக்கப்படல் வேண்டும்

(மனிதனுக்காகவே உற்பத்தி மாறாக உற்பத்திக்காக மனிதன் இல்லை)

(இவை போன்ற 5 கருத்துக்கள் விளக்கி எழுதப்பட்டிருப்பின் 2 × 5 = 10 புள்ளிகள்

(ii) குடும்ப வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளைக் குறிப்பிட்டு, அதற்கான இஸ்லாத்தின் தீர்வுகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

- குடும்ப வாழ்வு பற்றிய அறிமுகம்
- பிரச்சினைகளும் அதற்கான தீர்வுகளும்

**1. கணவன் - மனைவி தம் கடமைகளில் குறை செய்தல்**

தீர்வு : இருவரும் தம் கடமைகள் எதுவென உணர வேண்டும். அதன் விளைவுகளை அறிய வேண்டும். ஒருவர் அடுத்தவருக்கு இதனை உணர்த்த வேண்டும். கணவனும் மனைவியும் தம் கடமைகளை நிறைவேற்ற முறையே ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

**2. பிள்ளைகளின் கடமைகள் நிறைவேற்றப்படாமை**

தீர்வு : பிள்ளைகள் அமானிதம் இவர்களை உரிய முறையில் வளர்ப்பது பெற்றோரின் கடமை ஒருவர் மாத்திரம் இக்கடமையை நிறைவேற்ற மற்றவர் அலட்சியமாக இருக்கும்போது பிரச்சினை தோன்றும். எனவே இருவரும் தமது கடமைளில் கரிசனை காட்டவேண்டும்.

**3. கணவன் - மனைவி கருத்து வேறுபாடு**

தீர்வு : கருத்து வேறுபாடுகள் தோன்றுவது பொதுவானதாகும். ஆனால் அவை முற்றும் போதுதான் பிரச்சினை தோன்றும். எனவே இவ்வாறான நிலைகளில் பல வழிகாட்டல்களை இஸ்லாம் வழங்குகிறது. மனைவியின் புறத்தில் இது ஏற்படும் போது உபதேசம், படுக்கையை விட்டும் ஒதுக்குதல், இவை பயனளிக்காத போது இரு தரப்பில் இருந்தும் மத்தியஸ்தர்களை நியமித்து தீர்வு வழங்குதல். கணவனின் புறத்தில் இருந்து மனைவி பிரச்சினைகளை எதிர்கொண்டால் இருவரும் மனந்திறந்து பேசி பிரச்சினைகளை தீர்க்கலாம்.

**4. குடும்ப உறவினருடன் தொடர்பான பிரச்சினைகள்**

தீர்வு : பிரச்சினைகளின் வடிவங்களை, பாரதூரங்களை சரியாக இனங்கண்டு குர்ஆன், ஸுன்னா ஒளியில் தீர்வு பெற முயற்சித்தல்

**5. பொதுவாக கூட்டுக் குடும்பமாக வாழும் போது பல பிரச்சினைகள் இடம்பெற வாய்ப்பு உண்டு.**

தீர்வு : குடும்பத்தின் தலைவன் என்ற வகையில் தந்தையும், சிலபோது தந்தையுடன் சேர்ந்து தாயும் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும். இன்னும் சில வேளைகளில் குடும்பத்துக்கு வெளியே உள்ள உறவினர்களைக்கொண்டும் தீர்வுகளை பெற முயற்சிக்க வேண்டும். திருமணம் முடித்த தம்பதியினர் தனிக்குடும்பமாக வாழ்வது பலவகையிலும் பொருத்தமானதாக அமையும்.

**06. கணவன் மனைவியிடையில் பரஸ்பர புறிந்துணவு இன்மை**

(இவை போன்ற 5 விடயங்கள் விளக்கப்பட்டிருப்பின் $2 \times 5 = 10$ புள்ளிகள்)

07. இமாம் திர்மிதி (ரஹ்) அவர்களது வாழ்க்கை வரலாற்றைக் குறிப்பிட்டு அவர்கள் ஹதீஸ் கலைக்கு ஆற்றிய பங்களிப்பை ஆராய்க. (10 புள்ளிகள்)

**வாழ்க்கை வரலாறு**

- இவரின் இயற்பெயர் : அபூ மூஸா முஹம்மத் பின் ஈஸா அத்திர்மிதி (ரஹ்)
- பிறப்பு : ஹிஜ்ரி 209 குராஸானில் உள்ள திர்மிதி என்ற இடம் -
- மரணம் : ஹி 279
- ஆரம்பக்கல்வியை குராஸானில் பெறல்
- கல்வி கற்க கூபா, பஸரா, ஹிஜாஸ், பாஸித் போன்ற இடங்களுக்கு செல்லல்
- கல்வி கற்ற ஆசிரியர்கள் : இமாம் புகாரி, இமாம் முஸ்லிம், குதைபா இப்னு ஸஃத், அஹ்மத் இப்னு முஸ்னி
- நற்குணங்கள் : இறையச்சம், தியாகம், பிறரை மதித்தல், பொறுமை,அடக்கம், உயிர்களிடம் அன்பு, அனைத்திலும் பேணுதல்
- நினைவாற்றல் மிக்கவர், இறை தியானத்தில் அதிகம் ஈடுபாடு கொண்டவர்.